இணைப்பு I.

[1973 மார்ச் 28

[2-ஆம் பக்கத்தில் 295-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

வேளாண்-பணி கழகம் என்ற ஓர் அமைப்பு ஏதும் இல்லை.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகிய வேளாண்மைப் பணி-தொழில் முனைவோர் பயிற்சித்திட்டம் 1972 அக்டோபர் திங்களில் தொடங்கப் பட்டது. வேலையற்றிருக்கும் பொறியாளர்களை மாநில வேளாண்-தொழில் கழகங்கள் இத் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தாங்களே பயிற்சி அளிக்கின்றனர். அல்லது ஹிசாரிலோ புதினியிலோ பயிற்சியளிக் கின்றனர். பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ. 1,500 என்ற வீதத்தில் பயிற்சிக் கான செலவு உட்பட இதற்காகத் தேவைப்படும் நிதியுதவியை இந்திய அரசு, வேளாண்-தொழில் கழகங்களுக்கு வழங்குகிறது.

2. இத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம், பயிற்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. 1972-73 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் எண்ணிக்கையிலான தொழில் முனைவர்களுக்குத் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் பயிற்சியளித்தது.

(1) 1—7—1972 முதல் 31—10—1972 வரை நான்கு மாத காலத் திற்கு புதினி, ஹிசார், சென்னை ஆகிய இடங்களில் பயிற்சிபெறும் பொருட்டு, முதற் தொகுதியாக, வேலையற்றிருக்கும் தொழில் முனைவர் 17 (பதினேழு) பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2) தொழில் முனைவோர் 36 (முப்பத்தாறு) பேர் கொண்ட இரண் டாவது தொகுதி ஜனவரித் திங்கள் முடிவில் பயிற்சி முடிவுறப்பெற்றது.

இவர்கள் கிராமப் பகுதிகளில் வேளாண்-பணி நிலையங்களைத் தொடங் கும் பொருட்டு இவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக இவர்களது திட்ட அறிக்கைகளும் கடன் விண்ணப்பங்களும் சென்னை, இந்திய ஸ்டேட் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்குக் கடன் விரைவில் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(3) 29 (இருபத்தொன்பது) தொழில் முனைவோர் கொண்ட மூன்றா வது தொகுதி தெரிந்தெடுக்கப்பட்டு மத்திய பிரதேசத்திலுள்ள புதினி, குஜராத் மாநிலத்திலுள்ள மெஹ்சாண டிராக்டர் பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிபெற அனுப்பப்பட்டுள்ளது.

சுமார் 30 (முப்பது) வேட்பாளர்கள் 1973 பிப்ரவரி திங்கள் முடிவில் தெரிந்தெடுக்கப்பட்டு மைசூர் மாநிலத்தில், இராம கிருஷ்ணபுரம் என்ற இடத்திலுள்ள "எஸ்கார்ட்ஸ்" (Escorts Training School) பயிற்சி பள்ளிக்கு அனுப்பப்படுவர்.

[1973 மார்ச் 28

முதலிரண்டு தொகுதிகளைச் சேர்ந்த தொழில் முனைவோரால் தொடங்கக் கருதியுள்ள, வேளாண்–பணி நிலையங்களின் அமைப்பிடங்கள் இவ்வறிக்கையில் பின் சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. வேளாண்–பணி நிலையத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் நிதியுதவியை அளிக்க இந்திய அரசு உறுதியளித்துள்ளது :—

(1) இயந்திரங்கள் முதலியன குறித்த மூலதனச் செலவுக்காக ரூ. 3.45 லட்சம் வழங்குதல்.

(2) திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் 4 திங்களுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி உதவித்தொகை அளித்தல்.

(3) வங்கிகளிடமிருந்து தொழில் முனைவோர் பெற்றுக் கொள்ளும் கடன் தொகை குறித்த அவர்கள் செலுத்த வேண்டிய 5 சதவீத வட்டிக்கு மேற்பட்ட வட்டித் தொகையை வழங்குதல்.

மூலதனச் செலவு குறித்து முதல் தவணைத் தொகையாக ரூ. 2.45 லட்சத்தை இந்திய அரசு 1972 ஏப்ரல் திங்களில் வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 1 லட்சமும், தமிழ்நாடு வேளாண்–தொழில் கழகம் ஏற்கெனவே கொடுத்துள்ள பயிற்சி உதவித்தொகையும் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. (5 சதவீதத்திற்கு மேற்பட்ட) வட்டித் தொகை நாளடைவில் இந்திய அரசிடமிருந்து பெறப்படும்.

பிற்சேர்க்கை.

தொழில் முனைவோரால் தொடங்கக் கருதியுள்ள வேளாண்–பணி நிலையங்களின் அமைப்பிடங்கள்.

மாவட்டம்.	முதல் தொகுதி.	இரண்டாம் தொகுதி.	மொத்த எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
செங்கற்பட்டு	1 பெரியபாளையம்.	1 பொன்னேரி	5
		2 செங்கற்பட்டு	
		3 சுங்குவார்சத்திரம்	
		4 பூவிருந்தவல்லி	
வடாற்காடு	1 திமிரி	1 வேலூர்	
	2 ஆம்பூர்	2 குடியாத்தம்	5
		3 போளூர்	
தென்னார்க்காடு ..	1 பண்ருட்டி	1 பெண்ணாடம்	5
		2 புவனகிரி	
		3 கள்ளக்குறிச்சி	
		4 திண்டிவனம்	

மாவட்டம். (1)	முதல் தொகுதி. (2)	இரண்டாம் தொகுதி. (3)	மொத்த எண்ணிக்கை. (4)
தஞ்சாவூர் ..	1 நாகூர்	1 பேரளம் 2 கீவளூர் 3 கும்பகோணம் 4 மாயவரம் 5 திருத்துறைப்பூண்டி	6
திருச்சி	இல்லை.	1 துறையூர் 2 லால்குடி 3 ஜெயங்கொண்ட சோழபுரம். 4 குளித்தலை 5 புகளூர் 6 பேட்டைவாய்த்தலை	6
சேலம்	1 வேலூர்	1 ராசிபுரம் 2 நாமக்கல் 3 புதுசத்திரம்	5
கோயம்புத்தூர் ..	1 கோபிசெட்டி பாளையம். 2 ஆனைமலை	1 சத்தியமங்கலம் 2 தாராபுரம் 3 பவானி 4 ஆப்பக்கூடல்	6
தர்மபுரி	1 ஒசூர்	இல்லை	1
மதுரை	இல்லை	1 மேலூர்	1
திருநெல்வேலி ..	1 சேரன்மாதேவி 2 கோவில்பட்டி	1 ஆலங்குலளம் 2 புதுக்கோட்டை 3 தாழையூத்து 4 சங்கரன்கோவில்	6
இராமநாதபுரம் ..	..	1 அருப்புக்கோட்டை	1
கன்னியாகுமரி ..	..	1 நாகர்கோவில்	1
			48

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS